

நெல்லை மாவட்டம் சேரன்மகாதேவி வட்டம் வீரவநல்லூர் எஸ்.எல்.எம். மஹாலில் வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் பயனாளிகளுக்கு பட்டாக்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு மாவட்ட ஆட்சியர் மரு.இரா சுகுமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு பங்கேற்று ரூபாய் 33.21 கோடி மதிப்பில் 1165 பேருக்கு பட்டாக்களும், பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ், முன்னாள் எம்.பி., ஞானதிரவியம், மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா, திட்ட இயக்குனர் சரவணன் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

## நெல்லை மாவட்டத்தில் ரூ.36,76 கோடியில் 1985 பயனாளிகளுக்கு பட்டாக்கள் – நலஉதவிகள்!

# தமிழ்நாடு அரசின் திட்டங்கள் பிற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது!

### வீரவநல்லூரில் – அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!



நெல்லை, செப். 26 - நெல்லை மாவட்டம் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் பிற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக திகழ்கிறது வீரவநல்லூரில் மற்றும் தேவர்குளத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று ரூபாய் 36.76 கோடி மதிப்பில் 1985 பயனாளி களுக்கு பட்டாக்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார்.

நெல்லை மாவட்டம், சேரன்மகாதேவி வட்டம், வீரவநல்லூர் எஸ்.எல்.எம். மஹால் மற்றும் மானூர் வட்டம் தேவர்குளம் அடைக்கலாபுரம் விளக்கு வீரபாண்டியன் மஹாலில் 24.09.2025 அன்று வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு,மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் தலைமையில், நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல்வஹாப் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராம கிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் ரூ.36.76 கோடி மதிப்பில் 1985 பயனாளிகளுக்கு பட்டாக்கள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அதன்படி சேரன்மகாதேவி வட்டம், வீரவநல்லூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் ரூ.33.21 கோடி மதிப்பில் 1174 நபர்களுக்கு பட்டாக்களும், வேளாண்மைத் துறை சார்பில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் சார்பில் ரூ.4 ஆயிரம் மதிப்பிலான விசைதெளிப்பான் 1 பயனாளிக்கும் ஆவின் சார்பில் உடையாம்புளி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ரூ.70 ஆயிரம் மதிப்பில் பால் பரிசோதனை கருவிகளும், கூட்டுறவுத்துறை சார்பில் 4 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.30 இலட்சம் மதிப்பில் கடனுதவிகளும், சமூக பாதுகாப்பு திட்டத்தின் சார்பில் 7 பயனாளிகளுக்கு உழவர் அடையாள அட்டைகளும்,மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை சார்பில் 50 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகள் என 1237 பயனாளிகளுக்கு ரூ.33.52 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார்.

தொடர்ந்து வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் ரூ.19 இலட்சம் மதிப்பில் வடகிழக்கு பருவமழை எதிர்கொள்வதற்கும், இயற்கை பேரிடர் காலங்களில் பொதுமக்களை பாதுகாப்பதற்கும் தேவையான படகு, லைப் ஜாக்கெட், சோலார் விளக்கு, வாக்கிடாக்கி, மரம் அறுக்கும் இயந்திரம் உள்ளிட்ட 30 வகையான மீட்பு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார்.

இந்நிகழ்வில் அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 110 விதியின் கீழ் ஊர்க்காடு பகுதியில் நீண்ட நாட்களாக வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்கப்படும் என அறிவித்தார்கள். அதன்படி, முதல்கட்டமாக 1000 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.2 ம் கட்டமாக இன்று ஊர்க்காடு பகுதியிலுள்ள 468 நபர்களுக்கும் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அம்பாசமுத்திரம் வட்டத்தில் 772 நபர்களுக்கும்,சேரன்மகாதேவி வட்டத்தில் 402 நபர்கள் என மொத்தம் 1165 நபர்களுக்கு இன்று பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. பட்டா மட்டுமல்லாமல் அவர்களுக்கு தேவையான வீடுகள் கட்டித் தருவதற்காக இந்த ஆண்டு 1300 நபர்களுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறப்புத் திட்டங்களான தாயுமானவர் திட்டம்,நலன் காக்கும் ஸ்டாலின் திட்டம், உங்களுடன் ஸ்டாலின் திட்டம், அன்புக்கரங்கள் திட்டம் மக்களைத்தேடி மருத்துவம், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு முத்தான திட்டங்களை செயல்படுத்தியதன் மூலம் இந்தியாவில்பிறமாநிலங்களுக்கு முன்னுதாரணமாக திராவிட மாடல் அரசு திகழ்ந்து வருகிறது.

2 கோடி மகளிர்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.35 இலட்சம் மகளிர்கள்மீண்டு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெற புதிதாக விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் விண்ணப்பித்த தகுதியான நபர்களுக்கு உரிமைத்தொகை வழங்க வேண்டுமென அறிவித்துள்ளார்கள்.அதன்படி பணிகள் நடைபெற்று வருகிறது.

கடந்த 40 ஆண்டுகளில் 4.25 கோடி மக்களுக்கு பாதுகாப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற நான்கு ஆண்டுகளில் 2 கோடி நபர்களுக்கு பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 1 கோடி நபர்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் குடிநீர் தட்டுப்பாட்டை நிரந்தரமாக போக்குவதற்கும், பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கும் 19 கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளது இப்பணிகள் அனைத்தும் செயல்பாட்டிற்கு வரும்போது தமிழ்நாட்டில் அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் கிடைக்கும்.

ரூபாய்.990 கோடி மதிப்பில் சங்கரன்கோவில், தேவர்குளம், குருவிகுளம், மேலநீலிதநல்லூர், தென்காசி உள்ளிட்ட 530 கிராமங்களுக்கு தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகளுக்கு தேவையான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு விரைவில் பணிகள் தொடங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்தார்.

அதன் பின்னர் மானூர் வட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் ரூ.2.59 கோடி மதிப்பில் 630 நபர்களுக்கு பட்டாக்களும்,வேளாண்மைத்துறை சார்பில் ரூ.4 இலட்சம் மதிப்பிலான விசை உழுவை இயந்திரம் 2 பயனாளிகளுக்கும், ஆவின் சார்பில் தடியம்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு ரூ.70 ஆயிரம் மதிப்பில் பால் பரிசோதனை கருவிகளும், மாற்றுத்திறனாளிக் நலத்துறை சார்பில் ரூ.1.33 இலட்சம் மதிப்பில் மையல் இயந்திரம், பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலி 4 பயனாளிக்கும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் ரூ.32 இலட்சம் மதிப்பில் 3 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவிகளும், கூட்டுறவுத்துறை சார்பில் ரூ.26.50 இலட்சம் மதிப்பில் 5 பயனாளிகளுக்கு கடனுதவிகளும், சமூக பாதுகாப்பு திட்டம் சார்பில் 69 பயனாளிகளுக்கு உழவர் அடையாள அட்டைகளும்,மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் 34 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகள் என மொத்தம் ரூ.3.24 கோடி மதிப்பில் 748 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மா.சுகன்யா, சேரன்மகாதேவி சார் ஆட்சியர் ஆயுஸ்குப்தா, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரவணன்,உதவி ஆட்சியர் (பயிற்சி) தவலேந்து, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் செல்வலெட்சுமி அமிதாப் மானூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் செல்வி. ஸ்ரீலேகா அன்பழகன்,வீரவநல்லூர் பேரூராட்சித்தலைவர் சித்ரா நகர்மன்ற தலைவர்கள் பிராபகர பாண்டியன் (அம்பாசமுத்திரம்),செல்வ சுரேஷ் பெருமாள் (வி.கே.புரம்), கல்லிடைக்குறிச்சி பேரூராட்சித் துணைத்தலைவர் இசக்கி பாண்டி வட்டாட்சியர்கள் வைகுண்டம் (அம்பாசமுத்திரம்),காஜா கரிபூன் நவாஸ் (சேரன்மகாதேவி,) செல்லத்துரை (மானூர்) உட்பட அலுலவர்கள்,உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிகள், கழக நிர்வாகிகள்,பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

## கழக சட்டதிட்ட விதி:18, 19-ன் படி,

# தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழுத் தலைவர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

கழக சட்டதிட்ட விதி:18, 19–ன் படி, தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு தலைவராக திரு.**எஸ்.கல்யாணசுந்தரம், எம்.பி.**, (293, வன்னியர் தெரு, பம்பப்படையூர் அஞ்சல், கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம். ) அவர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள்: 25.09.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---



தென்காசி மாவட்டம் ஆயக்குடி ஜே.பி பொறியியல் கல்லூரியில் மாநில அளவிலான அடைத்தேர்வு 2025 (SLAS) பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான ஆய்வுக் கூட்டம் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது.உடன் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் மற்றும் தலைமை ஆசிரியர்கள் உள்ளனர்.

---

## தமிழ்நாட்டின் உரிமைக் குரலை

# உயர்த்திப் பிடித்த தமிழக முதல்வர்!



"ஓரணியில் தமிழ்நாடு என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் முழக்கம் என்பது, உரிய காலத்தில் விதைக்கப்பட்ட உரிமைக்கான முழக்கம் மட்டுமல்ல. மாறாக, உரிமைகள் மறுக்கப்படுமேயானால், உரிமைகளைப் பெறுவதற்கு களம் காண தமிழ்நாடு தயாராகும் என்கின்ற எச்சரிக்கை முழக்கமாகவும் இந்த எழுச்சி முழக்கம் பிரகடனப்படுத்துகிறது. கடந்த காலத்தில், நாட்டின் விடுதலைக்குப் பின்னர் அமைந்த ஒன்றிய ஆட்சிகளில் பா.ஜ.க தவிர்த்து மற்றைய கட்சிகளின் ஆட்சிகள் மதச்சார்பற்ற கோட்பாடுகளை அடித்தளமாக கொண்ட, ஜனநாயக குடியரசு ஆட்சி முறையைப் பின்பற்றி, நிர்வாக இயந்திரத்தை இயக்கும் ஆட்சிகளாகத்தான் செயல்பட்டு வந்தன.

ஆனால், 2014 ஆம் ஆண்டு தொடங்கி ஒன்றியத்தில் மோடி தலைமையில் நடைபெற்று வரும் ஆட்சி, இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படைகளை தகர்த்துவிட்டு, மதவாத அடிப்படையிலான ஓர் ஆட்சியை மத்தியில் நிறுவிடவும், நடைபெறுகின்ற கூட்டாட்சி முறைக்கு முடிவு கட்டிடவும் தொடர்ந்து தீவிர முயற்சியினைத் திட்டமிட்டு மேற்கொண்டு வருகிறது. பா.ஜ.காவால் உருவாக்கவிருக்கும் ஒன்றிணைந்த ஆட்சிக்கு, "இந்துராஷ்ட்ரம் எனப் பெயர் சூட்டி, கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் முடிய நீண்டு பரந்த இந்த நிலப்பரப்பிற்கு "இந்துராஷ்ட்ரம் என்றும், இங்கு வாழக்கூடிய மக்களில் இந்துக்களே முன்னுரிமை பெற்றவர்கள், மற்றைய மதம் சார்ந்த மக்கள் இரண்டாம்தர குடிமக்களாக கருதப்படக்கூடிய அரசியல் சமூகச் சூழ்நிலைகளை, ஒன்றிய பா.ஜ.க அரசு தொடர்ந்து திட்டமிட்டு படிப்படியாக, நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு, இந்திய அரசியல் சட்டத்தின் (INDIAN CONSTITUTION) எந்தெந்த பிரிவுகள் தடைகளாக இருக்கும் என்று பா.ஜ.க அரசு கருதுகிறதோ, அந்த பிரிவுகளை எல்லாம் படிப்படியாக மாற்றி அமைக்கின்ற முயற்சிகளையும், தொடர்ந்து பா.ஜ.க ஒன்றிய அரசு மேற்கொண்டு வரும் நிகழ்வுகளை, கடந்த பத்தாண்டு காலமாக இந்திய குடிமக்கள் அனைவரும்கவலையுடன்கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

பாரதிய ஜனதா கட்சியின் அரசியல் சித்தாந்த வழிகாட்டும் அமைப்பான ராஷ்டிரிய சுயம்சேவக்சங் (RSS) ஒன்றிய ஆட்சிப் பொறுப்பில் உள்ள பாரதிய ஜனதா கட்சிக்கு இந்தத் திட்டமிட்ட முயற்சியில் வழிகாட்டிக் கொண்டிருக்கிறது. இந்திய அரசியல் சட்டத்தை பாபா சாகிப், டாக்டர். அம்பேத்கர் அவர்களின் தலைமையில், உருவாக்கிய நம் தேசிய தலைவர்கள் இந்தியாவின் ஒற்றுமை சிதறுண்டுப்போகாமல்தொடர்ந்துபாதுகாக்கப்படவேண்டுமேயானால், "வேற்றுமையில் ஒற்றுமை என்ற சித்தாந்த அடிப்படையில் இந்திய அரசியலமைப்பு கட்டமைக்கப்பட வேண்டும் என்று கருதிய காரணத்தினால்தான், இந்திய ஒற்றுமையை நிரந்தரமாக பாதுகாக்கும் தொலைநோக்கு திட்டத்தின் வெளிப்பாடாக "மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுய ஆட்சி என்ற அடிப்படையில் அரசு அதிகாரங்கள் ஒன்றிய அரசிற்கும், மாநில அரசுகளுக்கும் பிரித்தளிக்கப்பட்டன.

**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
கழக உயர்நிலை
செயல்திட்டக்குழு
உறுப்பினர்



இப்படி, அதிகாரங்கள் பிரித்தளிக்கப்பட்ட சூழ்நிலையில், மாநிலங்கள் தன்னாட்சியோடு செயல்பட வேண்டுமெனில், ஒன்றி யத்திற்கு அபரிதமாக ஒதுக்கப்பட்ட அதிகாரக் குவியல்களைப் பிரித்து, மாநிலங் களுக்குத் தேவையான அதிகாரங்களை வழங்கிட வேண்டு மென்ற குரல் இப்பொழுதும் தொடர்ந்து இந்திய அரசியல் அரங்கத்தில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது. குறிப்பாக திராவிட முன்னேற்ற கழகத்தின் தலையாய அரசியல் கோட்பாடுகளில் ஒன்று தான் "மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்பதாகும். இத்தகைய அரசியல் சூழ்நிலையில், பிரதமர், நரேந்திர மோடி ஆட்சி அமைத்த நாள் தொடங்கி, பாரதிய ஜனதா கட்சியின் ராஜகுருவான ராஷ்டிரிய சுயம் சேவக்சங் (RSS) என்ற மதவாத அமைப்பின் செயல் திட்டங்களைத் திட்டமிட்டு படிப்படியாக, நிறைவேற்றிக் கொண்டே வருகிறது. பாரதிய ஜனதா கட்சியின் இந்த திரைமறைவு நடவடிக்கைகள் எதிர்க்கட்சிகள் ஆட்சிப்பொறுப்பில் இருக்கும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் ஆளுநர்கள் மூலமாக, தங்களது நோக்கங்களை நிறை வேற்றிக் கொள்ளும் திட்டத்தை ஒன்றிய பா.ஜ.க அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இனியும், மாநில அரசுகள் அமைதி காட்டுமேயானால், ஒன்றிய பா.ஜ.க அரசு தங்களது திட்டங்களை நிறைவேற்றி இந்தியாவை "இந்து ராஷ்ட்ரமாக மாற்றிடும் இலக்கை நோக்கிய தங்கள் பயணத்தை தொடர்வார்கள் என்பதில் ஐயமில்லை. எனவே, இனியும் அமைதி காட்டிட இயலாது என்பதோடு நெருங்கி வரும் மதவாத கலாச்சாரப் பண்பாட்டுப் படையெடுப்பை தடுத்து நிறுத்திட உடனடியாக களம் அமைக்க வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையில்தான் தமிழ்நாட்டின் முதல்வர், திராவிட மாடல் ஆட்சியின் பிதாமகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் அமைத்த களத்தின் எதிர் முழக்கம்தான் "தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம், "ஓரணியில் தமிழ்நாடு என்ற இலட்சிய முழக்கங்களாகும்.

இந்த முழக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் தமிழ்நாட்டின் முதல்வருக்குப் பின்னால், அனைவரும் மதம், இனம், ஜாதி என்கின்ற வேறுபாடுகளை தொலைவில் தூக்கி எறிந்துவிட்டு, தமிழ்நாட்டை நோக்கி வரும் திட்டமிட்ட கலாச்சாரப் படையெடுப்பை தடுக்கும் ஆம்! இனமான தமிழர் படை தான் 'ஓரணியில் தமிழ்நாடு' என்பதோடு இந்த மண்ணின் மானம் காக்க ஆர்ப்பரித்து எழுந்து வரும் தமிழர்படையின் முழக்கம்தான் "ஓரணியில் தமிழ்நாடு!

கடந்த செப்டம்பர் திங்கள் 17ஆம் நாள் கரூரில் நடைபெற்ற முப்பெரு விழா நிகழ்வில் கழகத் தலைவர் முதல்வர் ஏன் ஓரணியில் தமிழக மக்கள் ஒன்றிணைய வேண்டும் என்பதற்கான விளக்கத்தை கொட்டும் மழையில் கம்பீரமாக அலைகடல் போல் ஆர்த்தெளிந்த கையொலிக்கு மத்தியில் நெஞ்சுயர்த்து தெரிவித்தார்கள். ஒன்றிய அரசால் தமிழ்நாட்டின் நலனுக்கு எதிராக கொடுக்கப்படும் முதல் தாக்குதல் எதுவெனில், தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை குறைத்திடும் திட்டமிட்ட முயற்சியாகும். இப்படி நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை சட்டவிரோதமாகவும், நியாயவிரோதமாகவும் குறைக்க முயற்சிப்பதற்கு காரணம் நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டினுடைய உரிமைக் குரலை வலுவிலக்க செய்யும் முயற்சியாகும். எனவே, இந்த நயவஞ்சகத் திட்டத்தை எதிர்க்க வேண்டிய கடமையும், பொறுப்பும் தமிழ்நாட்டிலேயுள்ள ஒவ்வொரு தமிழனது கடமை என்பதை எடுத்து விளக்கினார்கள்.

இரண்டாவதாக, வாக்காளர்ப் பட்டியலை ஆழ்ந்து மறுபரிசீலனைச் செய்யும் திட்டத்தின் மூலம் (SIR) தமிழ்நாட்டு வாக்காளர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கும் பாரதிய ஜனதா கட்சிக்கு ஆதரவான வாக்காளரின் எண்ணிக்கையை அதிகளவில் சேர்ப்பதற்குமான முயற்சியினை ஒன்றிய அரசு திட்டமிட்டு மேற்கொள்ளவிருக்கிறது.

மூன்றாவதாக, நீட் தேர்வின் மூலம் தமிழ்நாட்டில் இளைஞர்களின் முன்னேற்ற பாதையில் தடைகள் அமைத்து இளைஞர்களின் எதிர்கால பிரகாசமானவாழ்விற்குமுட்டுக்கட்டைப் போடுகின்ற ஒன்றிய அரசின் முயற்சியையும் தமிழ்நாட்டிற்கு கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியை நிபந்தனையின்றி வழங்க வேண்டும் என்ற இளைஞர்களின் எதிர்கால வாழ்விற்கான போராட்டத்தில் தமிழ் மக்கள் ஓரணியில் ஒன்றுதிரள வேண்டும்.

நான்காவதாக, தமிழ்மொழி, பண்பாடு மற்றும் பன்முகப் பெருமைக்கும், புகழுக்கும் எதிரான நடவடிக்கை களை ஒன்றிய அரசு மேற்கொள்ளு மேயானால், அதனை எதிர்த்து களத்திலே நின்று போராடுவதற்கு தமிழர்கள் ஓரணியில் திரள வேண்டும்.

ஐந்தாவதாக, பெண்கள், விவசாயிகள், மீனவர்கள், நெசவாளர்கள், தொழிலாளர்கள் என உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகள் ஒன்றிய அரசின் சட்டங்களாலோ, திட்டங்களாலோ ஊனப்படுத்துமேயானால் தமிழர்கள் ஓரணியில் ஒன்று திரண்டு போராட வேண்டும்.

இந்த ஐந்து அம்சங்களை ஆழ்ந்து சிந்தித்து அதற்கான எதிர்வினை ஆற்றாவிடில் தமிழ்நாட்டு மக்கள் ஒன்றிய அரசின் அடிமைகளாக, ஆம்! உரிமையற்றவர்களாக வாழவேண்டிய இருண்ட எதிர்காலத்தை சந்திக்க வேண்டிய நிர்பந்தம் நிச்சயம் உருவாகும் என மாண்புமிகு. தமிழக முதல்வர் முப்பெரும் விழா நிகழ்ச்சி யில் முழுமையாக எடுத்து விளக்கி னார்கள். இந்த ஐந்து சமூக, அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளே தமிழ்நாட்டின் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படைகளாகும்.

எனவேதான் இந்தப் பிரச்சினைகளை முன்னெடுத்து, ஒன்றிய அரசிற்கு எதிராகப் போராடுவதற்கு அனைத்து மக்களும் ஜாதி, மதம், இனம், மொழி, வேறுபாடு கருதாமல் ஒன்றிணைய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். அனைத்து தமிழ்நாட்டு மக்களும் ஒன்றிணைய வேண்டும் என்ற வேண்டுகோள் தேர்தல் வெற்றிக்காக விடப்பட்டதல்ல. மாறாக, இந்த பிரச்சனைகளில் தமிழ்நாட்டு மக்கள் தங்களின் உரிமைகளை, நயவஞ்சகத்தோடு திட்டமிட்டுச் செயல்பட்டு கொண்டிருக்கும் ஒன்றிய அரசினுடைய நடவடிக்கைகளுக்கு எதிராக உறுதிப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் ஒவ்வொரு தமிழனும் இருக்கிறான் என்பதை நாம் அனைவரும் உணர்ந்து "ஓரணியில் ஒன்றிணைவோம், தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்! என்பதோடு தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தலைநிமிர்ந்து நெஞ்சுயர்த்தி நேர்வழியில் களம் காண்போம் வாரீர்!

---



புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்றத் தொகுதியில் புதுச்சேரி அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை மூலம் பெண் குழந்தைகளுக்கான பொருளாதார ஆதரவு மற்றும் அதிகாரம் அளித்தல் திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்திருந்த 58 பயனாளி களுக்கு இத்திட்டத்திற்கான ரூ. 50 ஆயிரம் வைப்பு நிதி ஆணை பெறப்பட்டு அதனை பயனாளிகளுக்கு வழங்கும் இந்த நிகழ்ச்சியில் தொகுதிசட்டமன்றஉறுப்பினரும்,சட்டமன்றஎதிர்க்கட்சித்தலைவருமானஇரா.சிவாகுழந்தைகளுக்கான வைப்பு நிதிக்கான ஆணையை பயனாளிகளுக்கு வழங்கினார்.